

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.2.81 கோடி செலவில் 2 உயர் மருத்துவ உபகரணங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நேற்று (28.06.2025) திறந்து வைத்தனர். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பெ.செந்தில்குமார், ச.காந்திராஜன், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ச.ராசப்பா, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. இரா.சுகந்தி இராஜகுமாரி மற்றும் பலர் உள்ளனர்.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் தரப்பாக்கம் ஊராட்சியில் ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமையில், ஊராட்சி மன்றத் தலைவர் எஸ்.பாண்டியன் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமை கழக பேச்சாளர் கோவை நாகநந்தினி ஆகியோர் கலந்துக்கொண்டு உரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஆலந்தூர் தொகுதி மேற்பார்வையாளர் சீ.பதமப்பிரியா, ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் மத்திய ஒன்றியச் செயலாளர் இ.மணி, இளம் பேச்சாளர் மா.சிவரஞ்சினி, சீனிவாசன் ஆகியோர் உள்ளனர்.

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட - மாவட்ட துணை- ஒன்றிய - நகர - பகுதி மற்றும் பேரூர் நிர்வாகிகள் நியமனம்!

## தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா அறிவிப்பு!

**விழுப்புரம் மத்திய மாவட்டம்**

மாவட்ட ஒருங்கிணைப்பாளர்-ப.அன்பரசு B.Com.,

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள்- ஆ.புஷ்பராஜ் ,(வானூர் களப்பணி), ஏ.மக்களன்பன்,(விழுப்புரம் களப்பணி), இ.ரமீஸ்ராஜா (சமூகவலைத்தளம்),திருமதி. பி.சசிரேகா (மகளிர்)

**விழுப்புரம் சட்டமன்ற தொகுதி**

விழுப்புரம் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்: களப்பணி -வி.ஆனந்தராஜ்,சமூக வலைத்தளம்-சே.குருராமலிங்கம்,மகளிர் - திருமதி. S.மகாலட்சுமி

விழுப்புரம்கிழக்கு நகர ஒருங்கிணைப்பாளர்கள்: களப்பணி-பா.சுந்தரவேல், சமூக வலைத்தளம் - மு.சிதம்பரநாதன்மகளிர் - திருமதி.பா.கோமதி

விழுப்புரம்மேற்குநகர ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -கு.அபுபக்கர்,சமூகவலைத் தளம், ப.ஜெயபிரகாஷ்,மகளிர்- செல்வி. ரா.சுசீலா

வளவனூர்பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:

களப்பணி -உ.ராஜேஷ்,சமூகவலைத்தளம் உ.ஹரிபிரசாத்,மகளிர்-திருமதி.க.சசிகலா

கோலியனூர் கிழக்கு ஒன்றியஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-மோ.எடிட்ராஜ், சமூகவலைத்தளம்- ரா.மோகன் பிரசாத்,மகளிர் திருமதி.A.கோமளா

கோலியனூர் மத்தியஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -நா.பிரகாஷ், சமூகவலைத் தளம்-ரா.ராஜேஷ்,மகளிர் - திருமதி.உமாராணி

கோலியனூர் தெற்குஒன்றியம் ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -ஆ.பழனி வேல்,சமூக வலைத்தளம்அ.அகிலன், மகளிர் -திருமதி.செல்வி ராமதாஸ்

கண்டமங்கலம்மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -ம.செல்வ குமரன், சமூக வலைத்தளம்அ.தயாநிதி, மகளிர் திருமதி.P.செல்வமேரி

காணை கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -S.V.எழில் ராஜா,சமூக வலைத்தளம்ரா.பெனடிக் வில்லியம்,மகளிர் -திருமதி.J.மஞ்சு

**வானூர் சட்டமன்ற தொகுதி**

வானூர் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -தெ.விஜயகுமார், சமூக வலைத்தளம்-B.வீரமணிகண்டன், மகளிர்- திருமதி.சி.ராதிகா

கோட்டகுப்பம்நகரஒருங்கிணைப்பாளர்கள்:களப் பணி- இ.ஜாகீர் உசேன்,சமூக வலைத்தளம்MRK.ராஜா,மகளிர்-திருமதி. ரோஜா பானு

கிளியனூர் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -ஏ.கிருபாகரன், சமூக வலைத்தளம்-வ.அருள்குமார்,மகளிர் -திருமதி.A.கமலா

கிளியனூர் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-கி.பிரசாத், சமூக வலைத்தளம் மா.அஜீத்குமார்,மகளிர்- திருமதி.விஜயலட்சுமி

வானூர்கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -ஆ.அருண், சமூக வலைத்தளம்சே.பாலாஜி, மகளிர்-திருமதி. M.ஜீவிதா

வானூர்மேற்குஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -சே.சேதுநாதன்,சமூக வலைத்தளம்ரா.பூபாலன்,மகளிர்-திருமதி. R.பத்மஸ்ரீ

வானூர்மத்திய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -மோ.மோனிஷ்,சமூக வலைத்தளம்கு.பிரதீப்,மகளிர்-திருமதி.K.சுதா

கண்டமங்கலம் மத்திய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -பூ.ராம தாஸ்,சமூகவலைத்தளம்பா.அரவிந்தன்,மகளிர்-திருமதி.K.ஜெயந்தி கண்டமங்கலம் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -மு.ரமேஷ்,சமூகவலைத்தளம் -ரா.ராமு,மகளிர் -திருமதி.சுபலட்சுமி

கண்டமங்கலம் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-R.சந்திரசேகரன்,சமூகவலைத்தளம் -கா.ராஜேஷ் கண்ணன்,மகளிர் -திருமதி.R.ஜீவஜோதி

**விழுப்புரம் தெற்கு மாவட்டம்**

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் :இரா.கிருஷ்ணராஜ் B.A.DTEd

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் :NKV.நாராயணமூர்த்தி,(திருக்கோவிலூர் களப்பணி),எஸ்.விக்னேஷ் (விக்கிரவாண்டி களப்பணி),அ.கதிரவன் (சமூகவலைதளம்),திருமதி.நா.மூகாம்பிகை (மகளிர்),

**விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி**

விக்கிரவாண்டி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -ஆர்.சுந்தர், சமூக வலைத்தளம் -ப.பவித்ரன்,மகளிர் - திருமதி. எம்.வனிதா

விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -ஏ.கபிலன், சமூக வலைத்தளம்-இ.எழிலரசன்,மகளிர் - செல்வி.எஸ்.பிரியா

விக்கிரவாண்டி மத்தியம் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி- ச.சாத திவாகர், சமூகவலைதளம்- பா.புஷ்பராஜ், மகளிர் செல்வி.ஆர்.ரோசி

விக்கிரவாண்டி மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி - ஆர்.மனோஜ் குமார்-சமூகவலைதளம் -எம்.கே.முத்து,மகளிர் -திருமதி.வி.நிவேதா

காணை தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி - எ.மணிகண்டன்,சமூக வலைதளம் - டி.குழந்தைவேலு,மகளிர் -திருமதி.பி.ஸ்ரீமதி

காணை மத்தியம் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-எஸ்.பூவராகவன், சமூக வலைதளம் என்.இளங்கோவன், மகளிர் -திருமதி.ஆர்.மாலதி

காணை வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -எம்.பி.சரவணன்,சமூக வலைதளம் - எஸ்.சந்தோஷ்குமார்,மகளிர் திருமதி.எம்.கலைமணி

விக்கிரவாண்டி பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-பா.யுவராஜ், சமூகவலை தளம்- எ.முகமதுராஜா,மகளிர் - திருமதி. ஆர்.மாலதி

**திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி**

திருக்கோவிலூர்தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-எம்.குமரவேல், சமூக வலைதளம்-எஸ்.திருநாவுக்கரசு,மகளிர்- திருமதி.ஆ.நேத்ராவதி

திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி- கே.விக்னேஷ், சமூகவலைதளம்- கு.விஜயரங்கம் மகளிர் -திருமதி.எஸ்.பிரியா

திருவெண்ணைய்நல்லூர் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி- வி.நவீன்குமார்,சமூகவலைதளம்-எ.பார்த்தசாரதி,மகளிர் -செல்வி.இரா.குறிஞ்சி

முகையூர் வடக்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -டி.குரு,சமூகவலைதளம் -கே.ஜீவா,மகளிர் -செல்விஎஸ்.சுபஸ்ரீ

முகையூர் தெற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-எம்.மோகன்தாஸ்,சமூக வலைதளம்,எம்.சரண்சிங்,மகளிர் -திருமதி. கே.ராஜகுமாரி

மணம்பூண்டி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி - பி.ஆசைத்தம்பி,சமூக வலைதளம்-கே.சரவணன்,மகளிர்-திருமதி. எம்.அனிதா

திருக்கோவிலூர் நகர ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி -பி.சத்தியநாராயணன்,சமூக வலைதளம்- பி.குமாரசாமி,மகளிர் செல்வி.எம்.உஷாராணி

திருவெண்ணைய்நல்லூர் பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி - க.இனாயத் துல்லா,சமூகவலைதளம் - எம்.அய்யப்பன், மகளிர் - செல்வி.எஸ்.துர்கா

அரகண்டநல்லூர் பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள்:களப்பணி-எம்.அகமது ஷெரீப்,சமூக வலைதளம் - பி.சேகர்,மகளிர்-திருமதி. கே.சூர்யா

**அமைச்சர்**
**முனைவர் டி.ஆர்.பி. ராஜா**
செயலாளர்,
தகவல் தொழில்நுட்ப அணி தி.மு.க.

## தூத்துக்குடி மாவட்டம் – திருச்செந்தூர்

# சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு முன்னேற்பாடு பணிகள்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. - அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் - - பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஜூன் 30-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேற்று முன்தினம் (28.06.2025) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகள் மற்றும் வருகின்ற ஜூலை 7 அன்று நடைபெற உள்ள குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினர்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவை மிக சிறப்பான முறையில் நடத்திட இந்த மாவட்டத்தின் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்களும் எங்கள் துறையின் செயலாளர், இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் அலுவலர்கள் முழு வேகத்தோடு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

குடமுழுக்கில் பங்கேற்றும் வகையில் திருக்கோயிலின் முதல் தளத்தில் அனுமதிக்கும் பக்தர்களின் எண்ணிக்கை குறித்து வரும் இரண்டாம் தேதி இறுதி முடிவு எடுக்கப்படும். வருகின்ற ஜூலை 1 அன்று மாலை தொடங்கும் யாக சாலையின் வேள்வி நிகழ்ச்சி யில் பங்கேற்க உள்ளோம், குடமுழுக்கிற்கு வருகை தரும் பக்தர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பிட வசதி, மருத்துவ வசதி குறித்தும், கடற்கரை மட்டுமல்லாது சுற்றுபிரகாரத்தில் எங்கிருந்து பார்த்தாலும் குடமுழுக்கை காண்கின்ற வகையில் அதிக எண்ணிக்கையில் எல்இடி திரைகள் அமைத்தல், போதிய மின் விளக்குகள், அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கும் வகையிலான ஏற்பாடுகள், திருக்கோயில் மற்றும் உபயதாரர்கள் சார்பில் அன்னதானம் வழங்கும் இடங்கள், உணவு சமைக்கும் கூடம், குடமுழுக்கு அன்று புனித நீர் தெளிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள ட்ரோன் வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், தீயணைப்பு வாகன வசதிகள், ஆம்புலன்ஸ் வசதிகள் போன்றவை குறித்து விரிவாக ஆலோசித்தோம். அவை அதிக அளவில் ஏற்பாடு செய்யப்பட உள்ளன.

ஆகவே இந்த குட முழுக்கை பொறுத்தளவில் எல்லா வகையிலும் பக்தர்களின் வசதிக்கேற்ப, சிறப்போடு எந்தவிதமான சிறு அசம்பாவிதமும் நிகழாமல் தேவையான முன்னேற்பாடு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இத்திருக்கோயில் பிரகாரத்திற்கு உள்ளே நடைபெறுகின்ற பணிகள் எதுவாக இருந்தாலும் விரைந்து மேற்கொள்ளப்பட்டு முடித்து தரப்படும். திருக்கோயிலுக்கு வெளியே உள்ள பணிகளான அணுகு சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள், நெடுஞ்சாலைத் துறை சார்ந்த பணிகள், உள்ளாட்சித் துறை சார்ந்த பணிகள் அனைத்திற்கும் போதுமான அளவு நிதியினை ஒதுக்கி தந்து, அந்த பணிகள் அனைத்தையும் குடமுழுக்கிற்கு முன்பாக முடித்து தர சம்மந்தப்பட்ட துறைகளுக்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

ஒட்டுமொத்தமாக அனைத்து பணிகளும் வரும் ஐந்தாம் தேதிக்கு முன்பாக முடிப்பதற்கு திட்டமிட்டு இருக்கின்றோம். ஒளிவு மறைவு இல்லாமல் ஊடகத் துறை நண்பர்கள் அனைவரையும் அழைத்துச் சென்று பணிகளை பார்வையிட்டோம். இதுவரை 90 சதவீதத்திற்கு மேற்பட்ட பணிகள் முடிவுற்று இறுதி கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. திருச்செந்தூர் குடமுழுக்கு விழா எல்லா வகையிலும் சிறப்பாக அமையும் என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், திருக்கோயில் தக்கார் ஆர். அருள் முருகன், தலைமையிட கண்காணிப்பு பொறியாளர் செல்வராஜ், இணை ஆணையர்கள் எம். அன்புமணி, எஸ்.ஞானசேகரன், திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் சுகுமாறன், காவல் துணை கண்காணிப்பாளர் மகேஷ்குமார், வட்டாட்சியர் பாலசுந்தரம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## டி.ஆர்.பாலு எம்.பி. - திருச்சி சிவா எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# பம்மல் வடக்குப் பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. - எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. - மேயர் வசந்தகுமாரி - கோ.காமராஜ் - வே.கருணாநிதி பங்கேற்பு! த.ஜெயக்குமார் நிகழ்ச்சி ஏற்பாடு!

காஞ்சிபுரம், ஜூன்.30-

பம்மல் வடக்குப் பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் கழகத்திற்காக களமாடும் கழக நிர்வாகிகளுக்கு கணையாழி அணிவித்தல் - பொற்கிழி வழங்கும் விழா இன்று (30.6.2025 - திங்கள் கிழமை) மாலை 6.00 மணியளவில் டெம்பிள் டவுன் சாலை, சுப்புராயன் நகர், திருநீர்மலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதிச் செயலாளர் த.ஜெயக்குமார் தலைமை வகித்து, நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிறார்.

கே.சந்திரன், எஸ்.கே. நெப்போலியன், மு. ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, ச.பிரபு, சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன், இரா. பாபுஜி, க.சுந்தரமூர்த்தி, மு. நித்தியானந்தம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கோ.காமராஜ், இரா. நரேஷ் கண்ணா, டி.எம். ஜோசப், சித்ராதேவி முரளிதரன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் கழக நிர்வாகிகளுக்கு கணையாழி அணிவித்து - பொற்கிழி வழங்கி கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி., மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா. மோ.அன்பரசன் ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

இக்கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் வசந்தகுமாரி, தொகுதி பார்வையாளர் ரபி அஹமது, துணை மேயர் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, எஸ்.சேகர், ஆதிமாறன், ஜி.கே.ரவி, ஆ.நடராஜன், இ.எஸ்.பெர்னார்ட், ஏ.கே.கருணாகரன், இரா.சுரேஷ், அ.தமிழ் மாறன், எஸ்.சதீஷ், இரா. பொன்ராம், வ.விஜய ரங்கன், பொன்.சதாசிவம், க. தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், மு.ரஞ்சன், கோல்டு டி.பிரகாஷ், பேராசிரியர் எல்.பிரபு, வி.ரவிச்சந்திரன், சி.கே.ஜெகதீஸ்வரன், பி. பிரசாத், பா.டில்லி, க.தனசேகரன், த.ராஜராமன், க.ரமேஷ், மு.நாகலிங்கம்,

ப.அன்பழகன், க. மோகன், மு.நி.தமிழ்குமரன், ப.ஆண்டவன், கி. பாலாஜி, கலைவாணி பிரவுஇ எம்.வி.வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், சண்முகசுந்தரி ஜெயகுமார், க.ராமசந்திரன், கோ.ஜானகிராமன், சத்தியபிரபு, விக்கி (எ) விக்னேஷ்வரன், வீ.கார்த்திக், ஜெ. இன்சமாம், ச.இராஜேஷ், வே.சிவசுப்பிரமணியன், கிருத்திகா தேவி, ஆர்.உமாமசங்கர் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

ஞா.பிரபு, ஆ.செந்தில் குமார், ஆர்.முரளிதரன், எம்.சுரேஷ்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சேப்பாக்கம் கே.எஸ்.பாண்டியன்
### ஜூன் 30 (2015)



கழகம் துவங்கிய காலத்திலேயே அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் வட்டச் செயலாளராக, ஆயிரம்விளக்கு பகுதி துணைச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகப் பேச்சாளரான இவர், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**